பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 10 2026 SUNDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பல்வேறு அமைச்சகங்களுக்கான நாடாளுமன்ற குழுக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

3. சட்டவிரோத ஊடுருவலை பாகிஸ்தான் தொடர்ந்து ஊக்கவித்து வருவதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

4. இஸ்ரேல் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்க வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் விமானி Smit Machchar-க்கு அந்நாட்டு பிரதமர் திரு. Benjamin Netanyahu அழைப்பு விடுத்துள்ளார்.

5. ஆசிய விளையாட்டு போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

>>>>>>><<<<<<<

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் புதுதில்லியில் தமது இல்லத்தில் நேற்று அவர் ஆலோசனை நடத்தினார்.

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய விவரகாரங்கள் குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல் நடைபெற்றதாக சமூகவலைதளத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் நலன்களுக்காக பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் சிறப்பாகவும், திறமையாகவும் செயல்பட வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி அந்த கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

இந்தியா - ரஷ்யா இடையேயான ஆலோசனைக் கூட்டம் புதுதில்லியில் நேற்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அதிகரித்துள்ள ஒத்துழைப்பு குறித்து இந்தக் கூட்டத்தில் அவர் எடுத்துரைத்தார்.

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான மோதலுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

>>>>>>><<<<<<<

பல்வேறு அமைச்சகங்களுக்கான நாடாளுமன்ற குழுக்களை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா மாற்றியமைத்துள்ளார்.

நிதிக்குழு தலைவராக பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. Bhartruhari Mahtab நியமிக்கப்பட்டுள்ளார்.

இதில் மக்களவை உறுப்பினர்கள் 21 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

வெளியுறவுக் குழுவிற்கு காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் திரு. சசிதரூர்-ம், ரயில்வே நாடாளுமன்ற குழுவிற்கு பிஜேபி மக்களவை உறுப்பினர் திரு. சுதிர் குப்தாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரசாயனம் மற்றும் உரத்துறைக்கான நாடாளுமன்ற குழுவிற்கு மக்களவை உறுப்பினர் டாக்டர் Kakoli Ghosh-ம், வேளாண் துறைக்கான நாடாளுமன்ற குழுத் தலைவராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர் திரு. Saranjith Singh Sanny-ம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு குழுவுக்கு பிஜேபி மக்களவை உறுப்பினர் திரு. ராதாமோகன் சிங்கும், நீர்வளத்துறைக்கான நாடாளுமன்ற குழுவிற்கு பிஜேபி மக்களவை உறுப்பினர் திரு. ராஜீவ் பிரதாப் ரூடியும் நியமிக்கப்பட்டிருப்பதாக மக்களவை செயலகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

சட்டவிரோத ஊடுருவலை பாகிஸ்தான் தொடர்ந்து ஊக்கவித்து வருவதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக புதுதில்லியில் உள்ள இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதரகத்தின் பொறுப்பு அதிகாரியை, வெளியுறவு அமைச்சகம் நேற்று நேரில் அழைத்து, தனது எதிர்ப்பை பதிவு செய்தது.

பஞ்சாப் மாநிலம், ஃபெரோஸ்பூர் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை சர்வதேச எல்லை அருகே நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பாகிஸ்தானின் குற்றச்சாட்டுகளையும் இந்தியா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து மூன்று பேர் அந்தப் பகுதியிலிருந்து இந்தியாவிற்குள் ஊடுருவ முயன்றதாகவும், அவர்களை திரும்பிச் செல்லுமாறு எல்லை பாதுகாப்பு படையினர் பலமுறை எச்சரித்த போதும் அவர்கள் இந்திய எல்லைக்குள் வர முயன்றதால், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகவே அவர்களை தடுக்க எல்லை பாதுகாப்பு படையினர் நடவடிக்கை மேற்கொண்டனர்.

எல்லைப் பகுதி ஊடுருவல், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றில் பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்பு படையின் பங்கு குறித்து அந்நாட்டு அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

>>>>>>><<<<<<<

வேகமாக மாறிவரும் உலக அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப ஒழுங்குமுறை விதிமுறைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியம் என்று நித்தி ஆயோக் உறுப்பினர் திரு. Rajiv Kauba கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் பேசிய அவர், போட்டி மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் விதிமுறைகள் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் தனியார் நிறுவனங்கள் செயல்படுவதால், ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அவசியம் என்றும் அவர் கூறினார்.

பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இல்லாமல் அதேநேரத்தில் ஆபத்துகளை கட்டுப்படுத்துவதில் சமநிலையான விதிமுறைகளுடன் ஒழுங்குமுறை அமைப்புகள் செயல்பட வேண்டும் என்றும் திரு. Rajiv Kauba கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

மேம்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக, வேலைவாய்ப்பு மற்றும் திறன்களை மேம்படுத்தும் பிரதமரின் திட்டம் இன்றுடன் ஓராண்டை நிறைவு செய்கிறது.

இத்திட்டத்திற்காக மத்திய அரசு 30 ஆயிரம் கோடி ரூபாயும். மாநில அரசுகள் 20 ஆயிரம் கோடி ரூபாயும், தொழில் துறை 10 ஆயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளன.

தொழில்துறையினரின் பங்களிப்புடன் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் உள்கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்புக்கு ஏற்ப தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய பாடத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நாடுமுழுவதும அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால், இந்த பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை 54 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<<

விண்வெளித் துறையில் ராக்கெட், செயற்கைக்கோள் மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பல துறைகளில் இளைஞர்கள் ஆர்வம் செலுத்த வேண்டும் என்று இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு. சிவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழகத்தின் திருச்சி விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 60 ஆண்டுகளில் இந்தியா ராக்கெட் மற்றும் செயற்கைக்கோளில் நிபுணத்துவம் அடைந்துவிட்டதாக கூறினார்.

இதன் அடுத்தகட்டமாக, மனிதர்களை பூமியிலிருந்து சுமார் 400 கிலோமீட்டர் உயரத்தில் புவி சுற்றுவட்ட பாதைக்கு அனுப்பி, பின்னர் அவர்களை பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டு வருவதே ககன்யான் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் அதிக செயல்திறனைவிட, மனிதர்களின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு இஸ்ரோ அதிக முக்கியத்துவம் அளிப்பதாகவும் திரு. சிவன் கூறினார்.

>>>>>>><<<<<<<<

முல்லைப்பெரியாறு விவகாரம் தொடர்பாக, தமிழ்நாடு, கேரள முதலமைச்சர்கள் பேச்சு நடத்தி, சுமுக தீர்வு காண்பார்கள் என்று கேரள அறநிலையத்துறை அமைச்சர் திரு. முரளிதரன் கூறியுள்ளார்.

நாகர்கோவிலில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

சபரிமலை வரும் பக்தர்களின் வசதிக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கேரள முதலமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் வரும் 17 ஆம் தேதி நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் தங்கக் கொள்ளை தொடர்பாக சிறப்பு விசாரணைக் குழு, உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்த பின்னர், அதன் மீது கேரள மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு. முரளிதரன் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

இஸ்ரேல் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்க வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் விமானி *Smit Machchar*-க்கு அந்நாட்டு பிரதமர் திரு. *Benjamin Netanyahu* அழைப்பு விடுத்துள்ளார்.

சவுதி அரேபியாவிலிருந்து இஸ்ரேலுக்குச் சென்ற விமானத்தை திட்டமிட்டு விபத்துக்குள்ளாக்குவதை தடுத்து, பயணிகளை காப்பாற்றிய இந்தியாவைச் சேர்ந்த விமானி *Smit Machchar*-ருடன் நேற்று தொலைபேசியில் பேசிய போது இதனை அவர் தெரிவித்தார்.

இந்திய விமானி துணிச்சலாக செயல்பட்டது பாராட்டத்தக்கது என்றும் அவர் கூறினார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் விமானி *Smit Machchar* விரைவில் குணமடைய வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

அமெரிக்காவின் பொருளாதார தடைகளை எதிர்கொள்ள புதிய அணுகுமுறையை ஈரான் வகுத்துள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. *Masoud Pezeshkian* தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஈரானின் பொருளாதாரத்தை நிர்வகிக்க புதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் ஆதரவோடு அமெரிக்காவின் நடவடிக்கைகளை ஈரான் வெற்றிகரமாக தடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈரான் அரசுக்கு ஆதரவளித்து வரும் பல்வேறு நிறுவனங்களை குறிவைத்து அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு. *Masoud Pezeshkian* குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

ஹவுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள *Sanaa* மற்றும் *Saada* மீது, ஏமன் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் ரியாதில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக கிளர்ச்சியாளர்கள் அறிவித்ததை அடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஏமன் ராணுவம் அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

ஆசிய விளையாட்டு போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் ஜப்பானில் இன்று நிறைவடைகிறது.

தொடக்கவிழா நடைபெற்ற *Nagoya* நகரத்தில் உள்ள *Mizuho* பூங்கா தடகள மைதானத்தில் நிறைவு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நிறைவுநாள் அணிவகுப்பில் இந்திய தேசியக்கொடியை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்ற வீராங்கனை *Neeru Dhanda* ஏந்திச் செல்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*>>>>>>>END<<<<<<<*